## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.65/2018

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மணி | மதம் | : இந்து |
| த/பெ | : கணேச ரெட்டி | ஜாதி | : -- |
| வயது | : 65 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : கூலி | வட்டம் | : திருத்தணி |

**01.08.2025**

**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 16.07.2006ம் தேதியிட்ட பதிவு செய்யாத கிரைய ஆவணம் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 15.10.2003ம் தேதியிட்ட என் அத்தை தேசம்மாள் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **(வீட்டு வரி ரசீது வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 06.03.2006ம் தேதியிட்ட என் அத்தை தேசம்மாள் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **(வீட்டு வரி ரசீது வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. 01.08.2018ம் தேதியிட்டு திருத்தணி சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து வழங்கிய வழிகாட்டி மதிப்பு தாக்கல் செய்கிறேன். **(வழிகாட்டி மதிப்பு வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 22.05.2018ம் தேதியிட்ட திருத்தணி காவல் ஆய்வாளருக்கு என் மனைவி கொடுத்த புகார் மனு புகைப்பட நகல் தாக்கல் செய்கிறேன். **(புகார் மனு வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர்

அலுவலகத்திலிருந்து கொடுக்கப்பட்ட ஒப்புகை ரசீது தாக்கல் செய்கிறேன். **(ஒப்புகை ரசீது வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)